**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடை வாடகைப் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் பட்டியலிடல் ரூபா 802,980 தொகையான போதிலும், இது ரூபா 200,745 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் ரூபா 602,235 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் தொகையின் தவணைப்பணமும் வட்டியும் முறைப்படி செலுத்தப்பட்டிராமையால் 2011 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 1,277,505 வடமேல் மாகாண பிரதம செயலாளரால் நேரடியாக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை கணக்கீடு செய்யப்பட்டிராமையால்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதியிலிருந்து அப் பெறுமதி அதிகமாகவும் 2011 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் அதே பெறுமதியால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆறு கணக்கு விடயங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 32,963,177 தொகையானதுடன் பட்டோலையின் படி உரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,736,583 தொகையானமையால் ரூபா 2,773,406 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று கண்டறியப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 41,050,512 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,978,645 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,892,876 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக 2009 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு வரையான பெறுமதி சேர் வரியாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 1,912,830 தொகையும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 333,971 தொகையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (அ) | வீதவரியும் வரியும் | 3,225 | 1,141 | 2,801 |
| (ஆ) | வாடகை | 976 | 5,723 | 2,848 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,975 | 4,059 | 203,908 |

**2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 மே முதல் திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணமும் 2013 ஒக்டோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரித்தாக அறவிடப்பட வேண்டிய முத்திரைக்கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.5 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு சபைக்குரித்தான ரூபா 625,000 பெறுமதியான 53-6135 ஆம் இலக்க டபிள் கப் வண்டியும் ரூபா 165,500 பெறுமதியான எஸ்எஸ் - 9114 ஆம் இலக்க கை உழவு இயந்திரமும் ரூபா 5,055 பெறுமதியான துவிச்சக்கர வண்டியும் ரூபா 35,000 பெறுமதியான நீர் இயந்திரமும் 03 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) பிரதேச சபையில் ஈடுபடுத்தப்பட்ட சுகாதார பணியாள் ஊழியருக்கு சேவைக்கு வருகை தராது 04 ஆண்டுகளாக ரூபா 953,232 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டிருந்தவாறு வாராந்த சந்தை வரிச் சேகரிப்பு சபை ஊழியர்களால் துணைப்பட்டோலை 108 இன் மூலம் அறவிடப்பட்டு சபைக்குச் செலுத்தப்படாது தவறான பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 15,615 ஆகக் காணப்பட்டது.

## 2.7 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தை வரித் தொகை 155 நாட்கள் வரை தாமதமாக்கப்பட்டு சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை செலுத்துவதைத் தாமதித்ததன் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்டிருந்த மிகைக்கட்டணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,807 செலுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இதற்காக மேலும் ரூபா 1,117,364 தொகையைச் செலுத்துவதற்கிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதித் தொகை ரூபா 2,994,962 ஆகக் காணப்பட்டதுடன் ஊழியர் விட்டுச்சென்ற, இடமாற்றலாகிச் சென்ற, இறந்த மற்றும் ஓய்வடைந்த ஊழியர்கள் 14 பேரிடமிருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர் கடன் மீதியான ரூபா 45,844 பல வருட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) ஊழியர் கடன் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு